888

உ

வேலுமயிலுந்துணை.

திருச்சிற்றம்பலம்.

கதிர்காமமாலை.

1 - JAN 1924



மதுரை, வடக்காவணிமூலவீதி,

புக்ஷாப்,

இ. இராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923. [அணா 2.

சிவமயம்

கதிர்காமமாலை.

விநாயகர் துதி.

ஆனைமுகனே அருமாமறைமுதலாய்
தானாகநின்ற தனிமுதலேதற்பரனே
வானோர்கள் தான் துதிக்கும்
வாழ்வே உனைப்பணிந்தேன்.

மாலை.

நித்தமுனைத்துதித்து சுப்பய்யா
நீணிலத்தோர் கொண்டாட
பத்துலட்சங்கோடிதமிழ் சுப்பய்யா
பாடவரமேயருள் வாய் 1

அத்தனருள்குமரா சுப்பய்யா
ஆயோன் மருகோனே
கர்த்தனே யெங்கள் கண்டி
கதிர்காம வேலோனே 2

அனுதினமுனை நினைந்து சுப்பய்யா
அடியேனுமீடேற
உன்னுடையமலர்ப்பதத்தை சுப்பய்யா
உகந்தெனக்குத்தந்தருள்வாய். 3

மனதிலும்வாக்கிலும் சுப்பய்யா
வஞ்சகமிலாதடியேன்
கனவிலும்நான்மறவேன் கண்டி
கதிர்காமவேலோனே. 4

வாக்குமனதுமொக்க சுப்பய்யா
வண்மையுடனின்பதத்தை
ஏற்குமருளோனே சுப்பய்யா
எல்லோர்க்கும்நாயகனே. 5

ஆர்க்கும்பெரியோனே சுப்பய்யா
அமரர்சிறைமீட்டோனே
கார்க்குப்பெருமாளே கண்டி
கதிர்காமவேலோனே. 6

வில்லாலடித்து சுப்பய்யா
விஜயனுக்குப்பாசுபதம்
வல்லாயுதங்கொடுத்த சுப்பய்யா
மாயோன்மருகோனே. 7

எல்லோர்க்கும்நல்லபிரான் சுப்பய்யா
என்றென்றேயெப்பொழுதும்
கல்லோதானுன்மனது கண்டி
கதிர்காமவேலோனே. 8

பாலாரநெய்யார சுப்பய்யா
பரதேசிக்கன்னமிட
கோலகாலக்குமரா சுப்பய்யா
கோவேவுனைத்தொழுதேன். 9

வேலாயுதனே சுப்பய்யா
விளங்குந்திருத்தண்டைக்
காலாயுதக்கொடியோய் கண்டி
கதிர்காமவேலோனே. 10

நீயிருக்கத்தெய்வானை சுப்பய்யா
நினவிருக்கவள்ளியம்மை
தாயிருக்கச்சேய்க்கு சுப்பய்யா
சலிப்புவருவானேன். 11

வேலதனைக்குழலூதும் சுப்பய்யா
வெண்ணெய்யுண்டோன்மால்மருகா
காயிலங்கும்தென்காவிக் கண்டி
கதிர்காமவேலோனே. 12

செங்கரத்தில்வேலேந்தும் சுப்பய்யா
என்சிந்தைதனில்வீற்றிருப்பாய்
பங்கப்படாதடியேன்
பாவமேதீர்த்தருள்வாய். 13

மங்கைவள்ளிபங்காளா
மயிலேறும்சுப்பிரமண்யா
கங்கைவளருடா
கதிர்காமவேலோனே. 14

சொல்லடா நீஇன்று
துணையாகவந்தெனக்கு
வெல்லடாஎந்தனுக்கு
வேண்டும்வரந்தருவாய் 15

அல்லடாசொல்லுகிறேன்
ஆருலும்உன்புதுமை
கல்லடாகந்தா
கதிர்காமவேலோனே 16

மீண்டிடும்சமர்க்களத்தில்
மென்மேலும்கைகலந்து
பண்டுபெருஞ்சூரர்களைப்
பாரவேலதனுலே 17

தெண்டிற்றமரர்
சிறைமீட்டசேவகனே
கண்டிவள நாடா
கதிர்காமவேலோனே 18

வானுலுதைத்து
மகாசூரனைவளைத்து
சேனுகொத்தருளும்
செங்கைவடிவேலோனே 19

பூணாரம்பூண்டவுன்
பொற்கமலசேவடியைக்
காணுதகண்ணென்ன
கதிர்காமவேலோனே 20

பட்டுடையும்ஒப்பிணையும்
பசாங்குசதரமும்
இட்டசவுக்களியும்
இலங்குமுகமாறும் 21

துஷ்டரவர்சூரர்களைத்
துரத்திவடிவேலெடுத்துக்
கட்டழகாவாகா
கதிர்காமவேலோனே 22

தொட்டியங்கள்பேய்பார்த்துச்
சொக்குப்பொடிபோட்டு
தோகையரைக்கொண்டுவந்த
துரைப்பழனி அய்யாவே 23

எள்ளளவுநாழிவந்து
இறங்கிமுகம்பாருமய்யா
கள்ளரைவேரறுக்கும்
கதிர்காமவேலோனே 24

பாலன்வருந்தாது
உன்பாரமலைகேட்கலையோ
வேலாயுதம்பிடித்த
மெய்யானதேசிகனே 25

சத்துருக்கள்யாரையும்
தவிடுபொடியாக்கிவிட்டார்
கர்த்தனேஎங்கள்
கதிர்காமவேலோனே 26

என்னுடையகவலைதனை
யீடேற்றவாருமய்யா
பன்னுதமிழ்பாட
படிக்கவரமேயருள்வாய் 27

அன்ன நடைவள்ளிபங்கா
ஆயன்மருகோனே
கன்னல்மொழியாளுடனே
கதிர்காமவேலோனே 28

சுத்தனேஞானச் சுடரே
சுடர்க்கொழுந்தே
பெத்தனுர்பேரே
பெருமாள்மருகோனே 29

குற்றமேசெய்தாலும் சுப்பய்யா
கொண்டுபொறுத்திடுவாய்
கர்த்தனேயெங்கள் கண்டிக்
கதிரகாமவேலோனே 30

ஏட்டிலெழுதவொண்ணு
எழுத்த தனியல்யா
இலங்கநாட்டார்அறிய
நடத்துவதுமுன்புதுமை 31

கோட்டானசிங்கம்
கொடியபுலிவந்தாலும்
காட்டாதேநீர்வருவாய்
கதிர்காமவேலோனே 32

என்னெஞ்சம்பா னும்
ஏழைபடுந் துயாம்
உன்னே அரியாதெனக்கு
உண்மை அருளுமய்யா 33

அன்னம்சிறு நடையாள்
அன்புவள்ளிபங்காளா
நன்னல்பொழியுமுத்தே கண்டி
கதிர்காமவேலோனே 34

நல்லாதரவுடனே
நானுன துபாதம்கெதி
அல்லா துவே றுளதோ
ஆசையெனக்கருள்வாய் 35

வல்லாதுசொல்ல
வயிரமெனும்நெஞ்சுடையான்
கல்லாதானசொல்லும்
கதிர்காமவேலோனே 36

உண்டெனவேநாள்தோறும்
உன்பாதம்போற்றிசெய்யும்
வண்டன்கபடன்வஞ்ச னுக்கு
அஞ்சலென்பாய் 37

அண்டர்தொழுமாமுகனே
ஆதிசிவன்புத்திரனே
கண்டதோர்மால்மருகா கண்டி
கதிர்காமவேலோனே 38

பொய்யாகவைத்திருந்
பிள்ளை தலைபொற்பாதம்
மெய்யாகவைத்தால்
வினையகலுமென்றுசொல்லி 39

அய்யாகுமரா
அன்புவள்ளிபங்காளா
கையாலுனைத்தொழுதேன் கண்டி
கதிர்காமவேலோனே 40

உந்தன்பாதம் துணையெனவே
உருதியுடனம்புமெந்தன்
சிந்தைகலிதீர
செல்வமெனக்கருளாய் 41

திந்தாவென்றுடும்
சிவன்மகனேதேவர்தொழும்
கந்தாகுமரா
கதிர்காமவேலோனே 42

அன்னையு நீதந்தையு நீ
ஆனாலுமெந்தனுக்குப்
பின்னையுலகுதனில்
பேசுவதும் நீயல்லவோ 43

முன்னேமுப்புரமெரித்த
முக்கண்ணார்புத்திரனே
கன்னல்சொரிமுத்தே
கதிர்காமவேலோனே 44

ஆதிசிவன்புத்திரனேசுப்பய்யா
அன்பானபாலகனே
என்வேதனையைதீர்க்கவரும்
வெற்றிவேலாயுதனே 45

ஆறெழுத்துள்ளிருக்கும் சுப்பய்யா
ஆறுமுகத்தய்யாவே
வேறுவினைத்துன்பமெல்லாம்
வேலாலறுப்பவனே 46

அய்யாதுரைப்பழனி சுப்பய்யா
அடிமைகொண்டவேல்முருகா
ஒய்யாரக்காரா நீ
ஓடிவரவேணுமிப்போ 47

வந்தவினை தீர்க்கும்
வடிவேலா சுப்ரமண்யா
கந்தா கடம்பா
கதிர்காமத்தய்யாவே 48

முன்னடிமை பின்னடிமை
மூவேழு முன்னடிமை
என்னடிமை கொண்ட
எங்கள் குருதேசிகனே 49

கொத்தடிமை கொடியடிமை சுப்பையா
குழந்தைகளும் முன்னடிமை
அத்தனையுமடிமை கொண்ட
ஐயங்களாறுமுக தேசிகனே 50

ஆண்டவனும் நீயாகி சுப்பய்யா
அடியவனும் நானாகி
மூண்டுவரும் வல்பிணி நோய்
முன்விலகிப் போய்விடுமே 51

மலைக்கிமலை நடுவே சுப்பய்யா
மலையாள தேசமெல்லாம்
அதட்டிச்சிறையெடுக்கும்
ஆறுமுகத்தய்யாவே 52

இல்லையோதெய்வம்
இருந்தாலிரங்காயோ
கருங்கல்லையோ நான்தொழுதேன் கண்டி
கதிர்காமவேலோனே 53

கல்லையாவுன்மனது
கலங்காதவயிரமய்யா
சொல்லையாவாய்திறந்து
துரைப்பழனி அய்யாவே 54

பாக்குதாவெற்றிலைதா சுப்பையா
பாலமிர்தம்சக்கரைதா
வாக்குதாகந்தா சுப்பய்யா
மலைப்பழனிவேலோனே 55

வந்துவகையுரைத்து
என்வாய்மொழிக்குச்சேதிசொல்லி
என்சிந்தைகலங்காமல்
திடவார்த்தைசொல்லவேணுமிப்போ 56

கந்தப்பாவேலா
கடம்பாவுனைத்தொழுதேன்
இந்தப்பாடார்படுவார்
ஏழைக்கிரங்குமய்யா 57

சண்முகனேசுப்ரமண்யா
எங்கள்சம்மாரா நீ
ஈராறுகையனே
என்வினையைத்தீருமய்யா 58

தண்ணீர்மலைமேலிருக்கும்
சண்முகவேலாயுதனே
வந்துவினை தீருமய்யா
மலைப்பழனி அய்யாவே 59

வாருமய்யா சுப்ரமண்யா
வள்ளிதெய்வானையுடனே
காருமய்யாஎங்கள் கண்டி
கதிர்காமத்தய்யாவே 60

வள்ளிதெய்வானையுடனே
மயிலேறிவந்தெனக்குக்
கள்ளவினை தீருமய்யாகண்டி
கதிர்காமத்தய்யாவே 61

அஞ்சிசடை குஞ்சிசடை சுப்பய்யா
அழகுசடைமார்பிரள
உன்குஞ்சிசடையைக்குறித்து
குயிலிருந்துகூவுகுதே 62

ஆறுவண்டி நாறுசட்டம் சுப்பய்யா
அதன்மேலேபுட்பாதம்
புட்பாதத்துள்ளிருந்து சுப்பய்யா
புறப்படுவதெக்காலம் 63

அரையிற்கிளிவளர்த்து சுப்பய்யா
அம்பலத்துக்காளாக்கி
தெருவில்விடச்சம்மதமோ
தென்பழனி வேலோனே 64

உன்னைவிட தெய்வம் சுப்பையா
உலகதனில்வேறுமுண்டோ
அன்னையு நீதந்தையு நீ சுப்பையா
ஆதரிக்கவேணுமிப்போ 65

தாயில்லாப்பிள்ளையைப்போல் சுப்பய்யா
தரணிதனில்யானிருக்க
நாயேன்படுந்துயரம்
நாடிவரவேணுமிப்போ 66

ஈராறுகாதிருந்தும் சுப்பய்யா
என்சொற்கேளாதென்ன
போராறுசூடிபெற்ற
பிள்ளை தவிப்பானே 67

சீர்பூத்தவுன்பாதம்
சேவைதந்து தீவினைதீர்
வார்பூத்தகொங்கையுமை
வந்தருளுந்தயாநிதியே 68

இந்திரனைகாத்தவண்ணு
எண்ணமுடியாதிடர்
தந்திமுகத்தெந்தை
சகோதரதயாநிதியே 69

மாமறைநாலுந்தொடர
மாட்டாவுனையெனிலிப்
பாமரனுமென்னுகும்
பழனிமலை அய்யாவே 70

இக்கலிகாலத்திலுமிங்
கேயுனைப்போலே துதெய்வந்
துக்கமெல்லாம்நீக்கி
வெற்றிருந்தயாபரனே 71

சற்றுமறிவில்லாத
சண்டாளனென்னினும்
முற்றுமெனையாள்வாய்
முத்திதாதயாபரனே 72

பத்திசிறிதேனுமில்லாப்
பாவினானென்றாலுஞ்
சித்தியருளய்யா
சிவாசலதயாபரனே 73

என்னபிழைநான்செய்
திருந்தாலும்நீபொறுத்து
வன்னமயிலேறி யென்முன்
வருவாய்பழனியப்பா 74

வாராயோமயிலிலே
வந்துகலிதீர்த்து
வரந்தாராய்தென்பழனி
சண்முகவேலாயுதனே 75

உன்னையன்றியுண்டோ
உலகிலெனக்குற்றதுணை
என்னசெய்வேன்பழனி
என்தாய்தயாநிதியே 76

தீராதவல்வினையும்
தீர்க்கும்நீ ஏழைமுகம்
பாராததென்ன தண்ட
பாணிதயாநிதியே 77

கதிர்காமமாலைமுற்றிற்று.

பரமபதி துணை.

நமது புத்தகசாலையில் தமிழ், தெலு ங்கு, கிரந்தம், தேவநாகரம், துலுக்கு, இங் கிலீஷ் முதலிய நானாவிதப் புத்தகங்களும், பாலர் வகுப்பு முதல் பி. ஏ. வகுப்பு வரை வேண்டிய ஸ்கூல் புத்தகங்களும் லைப்ரேரி களுக்கும், பரிசளிப்பதற்கும் வேண்டிய இங் கிலீஷ், தமிழ் பலவிதப் புத்தகங்களும், ஸ்டேஷனரி சாமான்களும், ஆங்கில விளை யாட்டுக் கருவிகளும், பலவிதமான பவுண் டன் பேனாக்களும் எப்போதும் தயாரில் வைக்கப்பட்டிருக்கிறது.

உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கு ம் தகுந்த கமிஷன் தரக்கூடும்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்ஸெல்லர், புதுமண்டபம், மதுரை.